### சாத்தனூர் அணையில் வெள்ளக் காலத்தில் ஏற்பட்டதை நினைத்து மீண்டும்

# பெரு வெள்ளம் வந்தால் அதனைத் தடுக்க தனித் திட்டம் தீட்டியிருக்கிறோம்!

### சட்டப்பேரவையில் – பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேள்விக்கு

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!

சென்னை, மார்ச் 20-

சாத்தனூர் அணையில் வெள்ளக்காலத்தில் ஏற்பட்ட ஒரு விபரீதத்தை நினைத்து அப்படி மறுபடியும் ஒரு பெரு வெள்ளம் வந்தால் அதை சமாளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு தனி ஸ்கீம் போட்டு இருக்கிறோம் என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

பெஃஞ்சால் புயலின் காரணமாக தென்பெண்ணையாறு மிகப் பெரிய அளவிலே வெள்ளப் பெருக்கெடுத்து, பல்வேறு கடலோர மாவட்டங்களிலே பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதை தடுக்கும் விதமாக தென்பெண்ணையாற்றிலே தடுப்பணைகள் கட்டப்படுமா, குறிப்பாக என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதிக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து கால்வாய் பாசனமாக இருக்கின்ற உபரிநீரை வெறையூர் மற்றும் பல்வேறு கிராமங்களுக்கு நீட்டிப்பு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. அதை செய்து தந்தால் அந்த உபரிநீர் அந்த கிராமங்களுக்கு செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். வெள்ள சேதம் ஏற்படாது. அதேபோல தடுப்பணைகள் கட்டுவதற்கு உலக வங்கியின் நிதியைப் பெற்று ஆயிரத்திற்கும் மேற்பட்ட தடுப்பணைகளை அரசு கட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன்: உறுப்பினர் சொன்னதுபோல் சாத்தனூர் அணையில் வெள்ளக் காலத்தில் ஏற்பட்ட ஒரு விபரீதத்தை நினைத்து, அப்படி மறுபடியும் ஒரு பெருவெள்ளம் வந்தால் அதை சமாளிக்கக்கூடிய அளவிற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு தனி Scheme போட்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே, பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோவிலுக்கு கிரிவல பாதை அமைக்கப்படும்

# நெடுஞ்சாலைகளில் பெட்ரோல் பங்க் அமைப்பதற்கான விதிகளைத் தளர்த்தியிருக்கிறோம்!

### சட்டப்பேரவையில் – விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, மார்ச் 20 -**

**நெடுஞ்சாலைத் துறை சாலைகளில் பெட்ரோல் பங்க் அமைப்பதற்கான விதிகளை தளர்த்தியிருக்கிறோம் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.**

**பெட்ரோல் பங்குகள் அமைக்க தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்கான நெறிமுறைகளை வகுக்க அரசு முன்வருமா? என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி கேட்ட கேள்விக்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதில் வருமாறு:-**



**அமைச்சர் எ.வ.வேலு பதில்**

நெடுஞ்சாலைத் துறையில் பராமரிக்கப்படும் சாலைகளில் பெட்ரோல் பங்க் அமைப்பதற்கு Indian Roads Congress (IRC12) 2016 வழிகாட்டுதலின்படி, இந்தியாவிலுள்ள அனைத்து வகை சாலைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், பெட்ரோல் பங்க் அமைப்பதற்கு தடையின்மைச் சான்று கோரி பெருமளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டதால், அதனை வரன்முறை செய்ய வேண்டுமென்று தமிழக அரசால் நகர்ப்பகுதி மற்றும் கிராமப்பகுதி என வகைப்பாடு செய்யப்பட்டு, அது கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த வகையிலே சமதளம், மலைப்பிரதேசங்கள் என பிரித்தும், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகள் என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அரசாணை எண் 25, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறை முகங்கள் துறை, நாள் 24-2-2022 அன்று ஓர் ஆணையை நாங்கள் வெளியிட்டோம். மீண்டும், Indian Oil நிறுவனம் முக்கியச் சாலைகள், இதர சாலைகளுக்கு விதிமுறைகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

அந்த வகையிலே அரசாணை எண் 121, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 1292023ல் மீண்டும் ஓர் ஆணையை நாங்கள் வெளியிட்டோம். மேற்கண்ட அரசாணை மூலம் தேவையான விதிமுறைகளுக்குட்பட்டு, பெட்ரோல் பங்க் அமைப்பதற்கு இப்போது தடையில்லா சான்றிதழ் வழங்கப்படுகிறது. அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதர மாவட்ட சாலைகளின் சந்திப்புகளிலிருந்து அது State Highways ஆக இருந்தாலும், 200 மீட்டர் தூரம் இருந்தால் அதற்கு NOC வழங்கலாம். அதே நேரத்தில் இன்னொரு வகைப்பாடு செய்திருக்கிறோம். ஆக, மாவட்ட இதர சாலைகளாக இருந்தால் அதற்கு IRC வழிகாட்டுதல் பிரகாரம் 100 மீட்டர் தூரம் இருந்தால் போதும் என்று இப்போது விதிமுறையைத் தளர்த்தியிருக்கிறோம். எனவே, அந்த வகையிலே மனு செய்கிறபோது, NOC கட்டாயம் துறையின் சார்பாக கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

**நெடுஞ்சாலைத் துறை விபத்துகள்!**

நகரப் பகுதிகளிலே பல்வேறு கட்டுமானங்கள் அதிகமாக வருகின்ற காரணத்தால் கார் அதிகமாக வாங்கி விடுகின்றனர். Two wheeler அதிகமாக வாங்கி விடுகின்றனர். ஒரு குடும்பத்திற்கு ஒரு கார் என்பது எல்லாம் மாறி ஒரு குடும்பத்தில் இருக்கிற அனைவருக்கும் கார் என்ற நிலை மாறியிருக்கிறது. இன்னும் குடும்பத்தில் இருப்பவர்களுக்கு ஏதாவது ஒரு வண்டி repair ஆனால் spare வண்டி வைத்துக்கொள்ளும் அளவிற்கு இன்றைக்கு பொருளாதாரம் வளர்ந்து இருக்கிற காரணத்தால், அதிகமான கார் இருக்கின்ற காரணத்தால் petrol bunkகும் அதிகமாக வருகிறது. இதிலே பயனாளிகள் என்ன கருதுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் எங்கு petrol bunk இருந்தாலும் சரி அந்த இடத்தில் உடனே அங்கு cutting இருந்தால் நேராக petrol bunk போகலாம் என்று கருதுகிறார்கள். அப்படி போகிற பொழுது நெடுஞ்சாலைத் துறையிலே அதிகமான விபத்துகள் ஏற்படுகின்றன. அதிகமான விபத்துக்களைக் குறைக்க வேண்டும் என்கிற முயற்சியில்தான் இதுபோன்ற கட்டுப்பாட்டை அரசாங்கம் வைத்திருக்கிறது. ஆனாலும் கூட, IRC guidelines பிரகாரம் 200 என்பதை நம்முடைய உறுப்பினர் பாலாஜி அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இரண்டு இடங்களில் நாங்கள் ஆணைகள் பிறப்பித்திருக்கிறோம். மேற்கொண்டு அவர் சொல்வதை கணக்கில் எடுத்துக் கொண்டு அதுபோன்ற இடங்கள் எதுவென்று எங்களுக்குக் குறிப்பு கொடுத்தால் அது NOCக்கு உகந்த இடங்களா அல்லது அந்த இடங்களில் cutting செய்ய முடியுமா என்பதையெல்லாம் பார்த்து, ஆய்வு செய்து NOC வழங்கப்படும்.

**திருச்செந்தூர் புறவழிச்சாலை!**

இந்த ஆட்சி பொறுப்பேற்ற உடனே தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆட்சிக்கு பெயர் திராவிட மாடல் ஆட்சி என்று சொன்னார். உடனே ஆன்மீக பெருமக்கள் எல்லாம் ஒரு விவாதத்திற்கு இடம் கொடுத்து விவாதம் செய்து கொண்டிருக்கிறார்கள், திராவிட மாடல் ஆட்சி என்கிறார்களே என்று. ஆனால், இந்த ஆட்சியிலே எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் என்ற அந்த அடிப்படையில், ஆன்மீக பெருமக்களெல்லாம் விரும்புகின்ற இடங்களுக்கெல்லாம் சாலை அமைக்க வேண்டுமென்பதை முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு அறிவுரையாக வழங்கினார்கள். அந்த வகையில்தான் இன்றைக்கு திருச்செந்தூருக்கு வெகுநாட்களாக கேட்ட புறவழிச் சாலை பணிகளுக்கு வேண்டிய பணிகள் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இராமேஸ்வரத்திலே இருக்கிற திருக்கோவிலுக்கு ஒரு புறவழிச் சாலை வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டார். அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோவிலுக்கும் கிரிவலப் பாதை அமைக்க வேண்டுமென்பதிலே இந்த அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் திருக்கழுக்குன்றம் கிரிவலப் பாதையில் நான்கு வழிச் சாலையாக உள்ளன. சற்றே செங்கல்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி சாலை, திருக்கழுக்குன்றம்மாமல்லபுரம் சாலை, ஒரகடம் அரிஜனக்காலனி சாலையிலிருந்து தேசிய முத்துப்பேட்டை சாலை, பஞ்சாயத்து சாலை இதில் சட்ரா செங்கல்பட்டு, காஞ்சிபுரம், அரக்கோணம், திருத்தணி சாலை அகலப்படுத்தி paver block அமைக்கும் பணி இந்த நிதியாண்டின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமையின் அடிப்படையில் அந்தப் பணிகளை நாங்கள் எடுத்துக்கொள்வோம்.

திருக்கழுக்குன்றம் மாமல்லபுரம் சாலையைப் பொறுத்தளவில், paver block பணிகள் 2022- 2023 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிட்டது. அப்போது ஒரகடம் அரிசனக் காலனி சாலையிலிருந்து தேசுமுகிப்பேட்டை சாலையை மேம்படுத்தி இருபுறங்களிலும் paver block அமைக்கும் பணிகள் இந்த நிதியாண்டிலே நிதி நிலைமைக்கேற்ப அவசியம் எடுத்துக் கொள்ளப்படும். இதன்மூலமாக அந்தத் திருக்கோயி லுக்கு கிரிவலம் போகிறவர்களுக்கு பல்வேறு வகைகளிலே அவர்களுக்கு ஏற்ற அளவிற்கு பாதைகள் அமைத்துத் தரப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி சார்பில் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் மு.சுப்பிரமணியம் தலைமையில் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செ.தமிழரசன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள். மேலும் கண்டன உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள். கூட்டத்தில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஆ.செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன், ப.க.பழனிச்சாமி, மா.சு.ராதாகிருஷ்ணன், பகுதி கழக செயலாளர் குமாரவடிவேல், பொ.ராமச்சந்திரன், வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், அக்னி சந்துரு, வில்லரசம்பட்டி முருகேசன், குறிஞ்சி என்.தண்டபாணி, க.லட்சுமண குமார், மண்டல தலைவர் காட்டுசுப்பு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க -

# முதற்கட்டமாக 4552 பள்ளிகளில் கற்றல் திறன் பயிற்சி!

## பள்ளிக் கல்வித் துறை நடவடிக்கை!

சென்னை, மார்ச் 20-

பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, முதற்கட்டமாக தமிழ்நாட்டிலுள்ள 4552 தொடக்கக்கல்வி அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களின் வாசிப்பு மற்றும் கற்றல் திறன் அடைவுகள் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் 100 நாட்களில் (100 Days Challenges) அடைந்திட இத்திட்டம் கடந்த ஆண்டு 2024 டிசம்பர் மாதம் இப்பணிகள் துவங்கப்பட்டு, வருகின்ற ஏப்ரல் முதல் மற்றும் இரண்டாவது வாரத்தில் ஆய்வு செய்ய தயார் நிலையில் இருக்கும் என தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக கற்றல் கற்பித்தல் பணிகளுடன் எண்ணும் எழுத்தும், திறன்மிகு வகுப்பறைகள், உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் போன்ற திட்டங்கள் மாணவர்களின் வாசிப்புத் திறனையும் கற்றல் திறனையும் மேம்படுத்தி வருகின்றது.

தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனேகொள்ளு, ஊராட்சிக்குட்பட்ட டி.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளித் தலைமை ஆசிரியை, திருமதி க.வளர்மதி என்பார் சமூக வலைத்தளப் பக்கத்தில் (Facebook) 04.11.2024 அன்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சருக்கு அழைப்பு விடுத்து, அதில் "எங்கள் பள்ளியில் 33 மாணவர்கள் பயின்று வருகின்றார்கள். அனைவரும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பாடங்களை நன்றாக வாசிக்கத் தெரிந்தவர்கள் மற்றும் கணிதப் பாடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய அடிப்படைத் திறன்களில் அடைவு பெற்றுள்ளனர். அமைச்சர் எங்கள் பள்ளிக்கு வருகை புரிந்து மாணவர்களின் கற்றல் அடைவுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பள்ளியில் மாணவர்களின் கற்றல் அடைவுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அனைவரும் தமிழ், ஆங்கிலம் சரளமாக வாசித்தனர், கணிதத்தில் அடிப்படைத் திறன்களை பெற்றிருந்தனர். அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நிலை பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்களும் அழைப்பு விடுக்க வேண்டும் என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில், தற்போது மேற்கண்ட பொருண்மையின் சார்பில் 4,552 பள்ளிகளின் பெயர்ப் பட்டியல் மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து (தொடக்கக் கல்வி) நவம்பர் 2024ல் பெறப்பட்டுள்ளது. அதனை ஏற்று, பள்ளிக் கல்வித் துறை, அரசு முதன்மைச் செயலாளர் மேற்கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துருக்களின்படி பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளுக்கு, மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மக்கள் மன்ற பிரதிநிதிகள், பள்ளி மேலாண்மைக் குழு, பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆகியோர் முன்னிலையில், தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசித்தல் பயிற்சி மற்றும் கணிதப் பாடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய அடிப்படைத் திறன்களை 100 நாட்களில் கற்பித்து, ஓப்பன் சேலஞ்ச் (Open Challenge) எனப்படும் வெளிப்படையான சவாலைப் பொது வெளியில் அறிவித்து இச்செயலை நடைமுறைப்படுத்த அனைத்து விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குத் (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் இப்பணிகள் துவங்கப்பட்டு, வருகின்ற ஏப்ரல் முதல் மற்றும் இரண்டாவது வாரத்தில் ஆய்வு செய்ய தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்த 100 நாட்களுக்குள் தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசித்தல் மற்றும் கணக்கு பாடத்தில் கழித்தல், கூட்டல், பெருக்கல், வகுத்தல் ஆகிய கற்றல் திறன்களில் அடைவு பெறுவதற்கான இலக்கினை நிர்ணயித்தல் சார்ந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலைமை ஆசிரியர்களுக்கான நேரடிக் கூட்டம் நடத்தி, போதுமான அறிவுரைகள், வழிகாட்டுதல்களை மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) வழங்க வேண்டும்.

மேற்கண்ட விவரங்களை சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் நேரடியாகக் கள ஆய்வு மேற்கொண்டு தேவையான ஆலோசனைகளை சார்ந்த மாவட்டக் கல்வி (தொடக்கக் கல்வி) அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு வழங்க வேண்டும். மேலும், மேற்கண்ட விவரத்தை ஆய்வு செய்யும் பொருட்டு சார்ந்த வட்டார வளமையப் பயிற்றுநர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

முதற்கட்டமாக 4552 பள்ளிகளில் செயல்படுத்தவும், பள்ளிப் பார்வையின்போது பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கி நடைமுறைப்படுத்தவும், அதனைத் தொடர்ந்து, அனைத்து பள்ளிகளிலும் இந்நிகழ்வை கொண்டு செல்வதற்கு முத்தாய்ப்பாகவும் இதன்மூலம் அனைத்து அரசுப் பள்ளிகளை நோக்கி மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்க ஒரு ஊக்குவிப்பாக அமையும் என்பதால், செயல்பாட்டினை முழுமையாக வெற்றி அடைய அனைத்து வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் தெரிவித்துள்ளார்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–4க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி